
தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெயில்: திருச்சியில் 107 டிகிரி



**சென்னை,**

தமிழகத்தின் 8 இடங்களில் வெள்ளிக்கிழமை 100 டிகிரிக்கும் மேல் வெயில் வாட்டி வதைத்தது. மாநிலத்திலேயே அதிகபட்சமாக திருச்சியில் 107 டிகிரி வெயில் சுட்டெரித்தது.

இதைத் தவிர கோவை, தருமபுரி, வேலூர், கரூர் பரமத்தி, மதுரை, சேலம், திருப்பத்தூர் (வேலூர்) உள்ளிட்ட இடங்களிலும் 100 டிகிரி வெயில் பதிவானது. சென்னையைப் பொருத்தவரை 99 டிகிரி வெயில் பதிவானது.

இந்நிலையில் வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தின் சில இடங்களில் சனிக்கிழமை (ஏப்.26) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்):

திருச்சி - 107

திருப்பத்தூர் (வேலூர்) - 105

மதுரை, வேலூர் - 104

கரூர் பரமத்தி, சேலம் - 102

தருமபுரி - 101

கோவை - 100

சென்னை - 99

கொடைக்கானல் – 71

**பலாப்பழ வாசம் அழைக்கிறது; விலையோ விரட்டுகிறது**



ஆலங்குடி அருகேயுள்ள புளிச்சங்காடு கைகாட்டியில் கமிஷன் மண்டியிலிருந்து பலா பழங்களை லாரியில் ஏற்றும் தொழிலாளர்கள்.

**ஆலங்குடி,**

கடும் வறட்சி காரணமாக பலா விளைச்சல் குறைந்துள்ளதால் அதன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வடகாடு, மாங்காடு, கொத்தமங்கலம், கீரமங்கலம், உள்ளிட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து அதன்மூலம் பல ஏக்கர் பரப்பளவில் பலா மரங்கள் வளர்க்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் விளையும் பலா பழங்களுக்கு தனி சுவை உண்டு என்பதால் இப்பகுதியில் விளையும் பழங்களுக்கு மார்க்கெட்டில் தனி விலை உண்டு. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பலா அதிகளவு விளைந்தாலும் வடகாடு

பகுதியில் விளையும் பழங்களை விட சுவை குறைவாக இருக்கும் என்பதால். இப்பகுதியில் விளையும் பலா பழங்களை கமிஷன் மண்டிகள் மூலமாகவும் நேரடியாகவும் கொள்முதல் செய்து தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் மற்றும் அண்டை மாநிலங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கடந்த 2 ஆண்டுகளில் போதியளவு பருவமழை பெய்யாததால் தண்ணீரின்றி பலா மரங்கள் தற்போது காய்ந்து கருகி வருகின்றன. ஆழ்குழாய் கிணறுகள் மூலம் தண்ணீர் பாய்ச்சும் இடங்களில் மட்டும் சுமாரான விளைச்சல் உள்ளது. தண்ணீர் பற்றாக்குறையினால் பல ஏக்கர் பரப்பளவிளான பலா மரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் பலா விளைச்சல் 50 சதவீதம் குறைந்துவிட்டது. மேலும் விளையும் பழமும் மிகவும் சிறியதாக உள்ளது. இந்நிலையில் பலா பழங்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் ஒரு பலா பழத்தின் விலை ரூ. 300-லிருந்து ரூ. 1000 வரையில் கமிஷன் மண்டியில் விற்கப்படுகிறது.

**இதுகுறித்து வடகாடு விவசாயி திருப்பதி கூறியது:**

இப்பகுதியில் அதிகளவில் பலா மரங்கள் உள்ளன. இங்கிருந்து பல மாவட்டங்களுக்கும், மாநிலங்களுக்கும் பலாக்காய் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக விளைச்சல் இல்லாமல் பெரும்பாலான மரங்கள் பட்டுப்போனதால் 50 பலாக்காய் காய்க்கும் மரத்தில் தற்போது 5 பலாக்காய்தான் காய்த்துள்ளது. விளைச்சல் கடுமையாக குறைந்துள்ளதால் விலை உயர்ந்தாலும் அதனால் எங்களுக்கு ஒன்றும் பயனில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள எங்களுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றார்.

## கம்பு, உளுந்து, பாசிப் பயறு, நிலக்கடலை விலை: விவசாயிகளுக்கு வேளாண்மை மையம் பரிந்துரை

**திண்டுக்கல்,**

கம்பு, உளுந்து, பாசிப் பயறு, நிலக்கடலை உள்ளிட்ட பயறு வகைகளை விற்பனை செய்வதற்கான விலைகளை, வேளாண்மை துணை இயக்குநர் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ், தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தில் உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் செயல்படுகிறது. இதன் மூலம், கம்பு, உளுந்து, பாசிப்பயறு மற்றும் நிலக்கடலை பயிர்களுக்கு விலை முன்னறிவிப்பினை, திண்டுக்கல் வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) நா. செல்வராஜ் வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளது: மானாவாரி பயிரான கம்பு தமிழகத்தில் மே, ஜூன் மற்றும் அக்டோபர், நவம்பர் என இரு பருவங்களில் விழுப்புரம், தூத்துக்குடி, மதுரை, தேனி, விருதுநகர், கடலூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படுகின்றன.

விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், கடந்த 12 ஆண்டுகளில் நிலவிய கம்பு விலைகளை ஆராய்ந்ததில் 2014 ஏப்ரல் மாதத்தில் பண்ணை விலை கிலோவுக்கு ரூ. 14 அல்லது ரூ. 15 இருக்கும் எனத் தெரிவித்துள்ளது. அதனால், இனி விலை ஏறுவதற்கான வாய்ப்புகள் குறைவு என்பதால், அறுவடை செய்துள்ள மற்றும் சேமித்து வைக்கப்பட்டுள்ள கம்பினை உடனடியாக விற்பனை செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உளுந்து மற்றும் பாசிப்பயறு: 2014 பிப்ரவரியில் விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், உளுந்தின் விலை கிலோவுக்கு ரூ. 55, பாசிப் பயறுக்கு ரூ. 66 கிடைத்துள்ளது. போதிய அளவு பயிர் உற்பத்தி இல்லாததால், விலை அதிகரித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட ஆய்வு முடிவுகளின்படி, 2014 ஏப்ரல், மே மாதங்களில் உளுந்தின் விலை கிலோவுக்கு ரூ. 52 முதல் ரூ. 53 வரையிலும், பாசிப் பயிறு கிலோவுக்கு ரூ. 62 முதல் ரூ. 64 வரையிலும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மே மாதத்துக்கு பின் விலை உயர்வதற்கு வாய்ப்புகள் குறைவு.

எனவே, விவசாயிகள் அறுவைட செய்த உளுந்தையும், பாசிப் பயிரையும் சேமித்து வைக்காமல், உடனடியாக விற்பனை செய்து பயன்பெற்றுக் கொள்ளவேண்டும். நிலக் கடலை: எண்ணெய் வித்துக்களில் முக்கிய பயிரான நிலக்கடலை,

இந்தியாவில் 2013-14ஆம் ஆண்டு கரீப் பருவத்தில் 47.15 லட்சம் டன் உற்பத்தி ஆனது.

தமிழகத்தில் சுமார் 3.85 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்படுகிறது. இதன் உற்பத்தி 10.60 லட்சம் டன்னாக இருந்தது.

ஹெக்டருக்கு 2,751 கிலோ. தை பட்டத்தில் விதைத்த நிலக்கடலை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

விலை ஏறுவதற்கான வாய்ப்புள்ளதா, சேமித்து வைக்கலாமா என்பதை தெரிந்து கொள்ள விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சேவூர் மற்றும் திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கடந்த 21 ஆண்டுகள் நிலவிய நிலக்கடைல விலைகளை ஆய்வு செய்யப்பட்டன. அதன்படி, 2014 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் சேவூர் சந்தையில் கிலோவுக்கு ரூ. 32 முதல் ரூ. 34 ஆகவும், திண்டிவனம் சந்தையில் கிலோவுக்கு ரூ. 31 முதல் 33 வரை இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

**பெரியகுளம் பகுதியில் சூறாவளிக் காற்றுடன் மழை: தென்னை மரங்கள் சாய்ந்தன பெரியகுளம்,**

பெரியகுளம் பகுதியில் வியாழக்கிழமை இரவு பலத்த சூறாவளிக் காற்றுடன் பெய்த மழை காரணமாக பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன.

பெரியகுளம் பகுதியில் பலத்த சூறாவளிக் காற்றுடன் மழை பெய்தது. இதனால் இப்பகுதியில் தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணைப் பகுதியில் காய்ப்புடன் கூடிய 200-க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதன் சேத மதிப்பு ரூ. பல லட்சம் ஆகும். மேலும் 10-க்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் சாய்ந்தன. இதனால் தேவதானப்பட்டியைச் சுற்றியுள்ள கிராமங்கள் இருளில் மூழ்கின.

எனவே பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## அடுத்த இரு நாள்கள் மழை பெய்ய வாய்ப்பு

**நாமக்கல்,**

தற்போதைய வானிலை அடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரு நாள்கள் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களில் (ஏப்ரல் 26 முதல் 29-ஆம் தேதி வரை) முதல் இரு நாள்களில் வாகனம் லேசான மேகமூட்டத்துடனும், 2 மிமீ மழை பெய்யவும் வாய்ப்புள்ளது. அடுத்த இரு நாள்கள் வானம் தெளிவாகவும், மழையின்றியும் காணப்படும். காற்றின் திசைவேகம் மணிக்கு 4 கிமீ முதல் 6 கிமீ வேகத்தில் தெற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 80.6 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 104 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 28 சதம் முதல் அதிகபட்சம் 72 சதம் வரை இருக்கும்.

**கோழிப் பண்ணையாளர்களுக்கு**

தற்போதைய வானிலை அடிப்படையில் பகல், இரவு வெப்ப அளவுகள் உயர்வதாலும், அதிகபட்ச வெப்ப அளவுகள் நிலவும் நேரம் அதிகரித்திருப்பதாலும் கோழிகளிடையே வெப்ப அயற்சி அதிகரித்து, வெப்ப அதிர்ச்சிக்குள்ளாக வாய்ப்புள்ளது.

எனவே, பண்ணையாளர்கள் ஃபாக்கர்ஸ் குளிர்விப்பு முறையைத் தீவிரமாகப் பின்பற்ற வேண்டும். தண்ணீர் குழாய்களில் நீர் சூடாகாமல் இருக்க அவ்வப்போது தண்ணீரை வெளியேற்றி, தொடர்ந்து குளிர்ந்த நீர் கிடைக்கச் செய்யவும் வேண்டும்.

கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட ஆய்வில் கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி, மேல்மூச்சுக் குழாய் நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்தது. எனவே, பண்ணையாளர்கள் பண்ணைகளில் நோய் கிருமி நாசினி மருந்துகளைத் தெளிப்பதுடன் கோடைகாலப் பராமரிப்பு முறைகளை தவறாமல் பின்பற்றவும் வேண்டும்.

**வேளாண் விவசாயிகளுக்கு**

தற்போது மரவள்ளியில் செம்பேன் தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது. இந்தச் செம்பேன்கள் வறட்சி, அதி வெப்பநிலை காலங்களில் பெருகி இலைகளை வெளிறச் செய்யும்.

பலவகைப் பயிர்களை மாற்று உணவாக உள்கொள்வதால், 20 முதல் 33 சதம் மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, செம்பேன்கள் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஓமைட் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு .05 மிலி என்ற விகிதத்தில் ஒட்டும் திரவம் ஒரு மிலி, காதி சோப்பும் கலந்து தெளிக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிருஷ்ணகிரி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதை நிறுத்த வேண்டும்

**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதை நிறுத்த வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ராமகவுண்டர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

கிருஷ்ணகிரி அணை நீரைக் கொண்டு ஆண்டுக்கு இரண்டு போகம் சாகபடி செய்வது வழக்கம். இந்த நிலையில், இரண்டாம் போகத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டு அதன் மூலம் சாகுபடி செய்யப்பட்ட நெல் கதிர்கள் நன்கு விளைந்து அறுவடைக்குத் தயார் நிலையில் உள்ளன. சில இடங்களில் அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது, அணையிலிருந்து தண்ணீர் தொடர்ந்து திறந்துவிடப் படுவதால், வயல்களில் தண்ணீர் தேங்கி நெல் கதிர்கள் அறுவடை செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், தொடர்ந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதாலும், வரும் காலங்களில் பருவ மழை குறையும் என்பதாலும் பாசனத்துக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி, கிருஷ்ணகிரி அணையிலிருந்து தொடர்ந்து தண்ணீர் திறந்து விடுவதை நிறுத்த வேண்டும் என்றார் அவர்.

## "ஆடு வளர்ப்பு இலவச பயிற்சிக்கு மே 2-க்குள் விண்ணப்பிக்கலாம்'

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம் மூலம் ஆடுகள் வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சிக்கு மே 2-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பயிற்சி நிலைய இயக்குநர் சு. ரமேஷ் வெளியிட்ட தகவல்: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் கிராமப்புறத்தைச் சேர்ந்த படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்கு பல்வேறு தொழில் பயிற்சிகளை அளித்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக ஆடுகளை வளர்க்கும் தொழில் நுட்பம் குறித்த 6 நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின் போது இலவச மதிய உணவு மற்றும் பயிற்சிக்கான கையேடுகளும் வழங்கப்படுகிறது. மேலும் பயிற்சியின் முடிவில் பயிற்சி நிறைவுச் சான்றிதழ் வழங்கப்படும். இதில் சேர விருப்பமுள்ளவர்கள் 18 வயது முதல் 35 வயது வரை உள்ள கிராமப்புற ஆண்கள் மற்றும் பெண்கள் தங்களது மார்பளவு அளவு 3 புகைப்படங்கள், மாற்றுச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை நகல்களுடன் கைப்பேசி எண்ணையும், குறிப்பிட்டு வருகிற 2.5.2014-க்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு நேரில் வந்து விண்ணப்பிக்கலாம். நிலைய இயக்குநர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம், 1506-2 மேல 4 -ம் வீதி(திலகர் திடல் எதிரில்) புதுக்கோட்டை 622 001. மேலதிக விவரங்களுக்கு 04322 - 225 339, 99947 37185 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## குமரி மாவட்டத்தில் கோடை மழை

**நாகர்கோவில்,**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக இடி, மின்னலுடன் ஆங்காங்கே கோடைமழை பெய்து வருகிறது. இந்த மழையினால் வெயிலின் தாக்கம் தற்போது தணிந்துள்ளது. எனினும் இரவு நேரத்தில் வெப்பம் அதிகமாகக் காணப்படுகிறது. வியாழக்கிழமை மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளில் மழை பெய்துள்ளது. குறிப்பாக பேச்சிப்பாறை அணைப் பகுதியில் 28.2 மி.மீ., மழையும்,

பெருஞ்சாணியில் 41.2 மி.மீ., சிற்றாறு-1-ல் 10.2 மி.மீ., சிற்றாறு-2-ல் 13.6 மி.மீ., மாம்பழத்துறையாறு அணைப் பகுதியில் 20 மி.மீ., பூதப்பாண்டியில் 11.5 மி.மீ., சுருளோட்டில் 37.4 மி.மீ., கன்னிமார் 2.05 மி.மீ., மயிலாடியில் 2.5 மி.மீ., மழையும் பதிவாகி உள்ளது. வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி வரை வெயிலின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டது. மாலையில் வானம் மேகமூட்டத்துடன் இருந்தது. எனினும் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக உணரப்பட்டது.

**குளச்சலில் நெத்திலி மீன் சீசன் தொடக்கம்**

**நாகர்கோவில்,**

குளச்சல் கடலில் நெத்திலி மீன் சீசன் தொடங்கியுள்ளதையடுத்து கட்டுமர மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். குளச்சல் பகுதியில் இருந்து 300 விசைப் படகுகளும், 1000-க்கும் மேற்பட்ட பைபர், வள்ளம், கட்டுமரங்களும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இதில் கட்டுமரத்தில் மீன்பிடிக்க சென்ற மீனவர்களுக்கு நெத்திலி மீன்கள் அதிகமாக கிடைத்துள்ளன. இந்த மீன்கள் சுமார் 3 ஆயிரம் முதல் ரூ. 4 ஆயிரம் வரை விலை போனதாக மீனவர்கள் தெரிவித்தனர். இப்போது நெத்திலி மீன் சீசன் தொடங்கி உள்ளதால், கட்டுமர மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தென்மாவட்டங்களில் கோடை மழை : வெப்பத்தின் தாக்கம் குறைகிறது**

**சென்னை**: கடந்த, இரு தினங்களாக, நெல்லை, கன்னியாகுமரி மற்றும் மதுரையில், ஆங்காங்கே பெய்து வரும் கோடை மழையால், வெப்பத்தின் தாக்கம் குறைந்துள்ளது. குமரிக்கடல் பகுதியில் கடந்த சில தினங்களாக நிலவி வரும், காற்று முறிவு மற்றும் வெப்பச் சலனம் காரணமாக, நெல்லை, குமரி, விருதுநகர்

உள்ளிட்ட பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை நிலவரப்படி, தூத்துக்குடி, 3; நெல்லை - அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி - நாகர்கோவில், 2; இரணியல், குளச்சலில், 1 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. தொடர்ந்து, 25ம் தேதி காலை நிலவரப்படி, விருதுநகர் - திருச்சுழி, 3; நெல்லை - சேரன்மாதேவி, 2; மதுரை - மேலூர், மதுரை விமான நிலையம், சிட்டம்பட்டி, நெல்லை - அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி - தக்கலையில், 1 செ.மீ., மழை பதிவானது. இந்த கோடை மழை, இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வெப்பத்தின் தாக்கம் குறைவு: வட தமிழகம் மற்றும் மத்திய தமிழகத்தின் திருச்சி, தென் தமிழகத்தின் துவக்கப்பகுதியான மதுரை உள்ளிட்ட இடங்களில், கடந்த சில தினங்களாகவே, வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருந்தது. குறிப்பாக, மதுரையில், வெப்பநிலை, 39 - 40 டிகிரி செல்சியசை ஒட்டியே இருந்தது. மழை காரணமாக, வெப்பம் குறைந்து, நேற்று காலை நிலவரப்படி, மதுரையில், 38 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியது. அனல் காற்றின் தாக்கமும் குறைந்துள்ளது. அதிகபட்சமாக, சேலத்தில், 40; திருத்தணி, திருச்சி, தர்மபுரியில், 39 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியது.

**தேங்காய், கொப்பரை விலை உயர்ந்தது!; விளைச்சலின்றி விவசாயிகள் கவலை**




**சோழவந்தான்** : மதுரையில், மழையின்றி விவசாயப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தேங்காய் விளைச்சல் பெருமளவு குறைந்ததால் விலை அதிகரித்து உள்ளது. விலை உயர்ந்தாலும், விளைச்சல் இல்லாததால் தென்னை விவசாயிகள் கவலையில் உள்ளனர். சோழவந்தான், கச்சைகட்டி, வாடிப்பட்டி,

பாலமேடு உள்ளிட்ட பகுதிகளில் தென்னை விவசாயம் நடக்கிறது. மழை பொய்த்ததால் பல இடங்களில் தண்ணீரின்றி தென்னைகள் காய்ந்தன. இதனால், தென்னந்தோப்புகள் அழிக்கப்பட்டு நிலங்கள் மாற்று விவசாயத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

தேங்காய் விலை உயர்வு: சோழவந்தானில் இருந்து மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களுக்கு தேங்காய் அதிகம் அனுப்பப்படுகிறது. போதுமான விளைச்சல் இல்லாததால், தேங்காய் வரத்து பாதியாக குறைந்து உள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரலில் 1150 காய்கள் ரூ.4000க்கு விற்றது. தற்போது 1150 காய்கள் ரூ.8000 என ஒரு மடங்கு உயர்ந்துள்ளது.

தென்னை அழியும் அபாயம்: விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். கிணற்று நீரை விலைக்கு வாங்கி, தென்னைகள் கருகாமல் காத்து வருகின்றனர். எனினும், தண்ணீர் போதுமானதாக இல்லை.

நீரை விலைக்கு வாங்குவதால் மும்மடங்கு செலவாகிறது. கோடை மழை கை கொடுத்தால் மட்டுமே தென்னைகளை காப்பாற்ற முடியும். மழை பொய்த்தால் தென்னை அழியும் அபாயம் உள்ளது.

கவலையில் விவசாயிகள்: சோழவந்தான் தேங்காய் மொத்த வியாபாரி சரவணன் கூறியதாவது: 15 கிலோ எடையுள்ள கொப்பரை விலை ரூ.2350.

இதன் விலை கடந்தாண்டு 50 சதவீதம் குறைவாக இருந்தது. தேங்காய் பருப்பு ஒரு கிலோ ரூ.110. இதன் விலை கடந்த ஆண்டு ஏப்ரலில் ரூ.50 ஆக இருந்தது.

தேங்காய் விலை ஆறு மாதமாக விலை உயர்ந்து வருகிறது. ஆனால், விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் கவலையில் உள்ளனர், என்றார்.

நஷ்டஈடு எதிர்பார்ப்பு: சோழவந்தானில் முன்பு கொடிக்கால் வெற்றிலை விவசாயம் அமோகமாக இருந்தது. நோய் காரணமாக வெற்றிலை விவசாயம் பிரகாசமாக இல்லை. இத்தொழில் அழிவின் விளிம்பில் உள்ளது. மாற்று ஏற்பாடாக தென்னை விவசாயத்தில் கவனம் செலுத்தினர்.

மழையின்றி தென்னையும் கருகி வருகிறது. விவசாயிகள் நலன் கருதி நஷ்டஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### விலை உயர்வால் தேங்காய் ஏற்றுமதி பாதிப்பு



**கொச்சி**: கடந்த ஓராண்டாக, நாட்டின் நான்கு தென்மாநிலங்களில், தேங்காய் உற்பத்தி குறைந்து போயுள்ளது. இதனால், தேங்காய் விலை உயர்ந்து வருகிறது. இது, ஏற்றுமதியில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

வளைகுடா நாடுகள்:கடந்தாண்டு, ஒரு கிலோ தேங்காய் விலை, 14 – 15 ரூபாயாக இருந்தது. இது தற்போது, 32 – 38 ரூபாயாக அதிகரித்து உள்ளது.இதனால், வளைகுடா நாடுகளுக்கான தேங்காய் ஏற்றுமதி, குறைந்து போயுள்ளது என, தேங்காய் மேம்பாட்டு வாரியம் தெரிவித்து உள்ளது.மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள, இந்தியர்களின் தேவையை பூர்த்தி செய்ய, நம்நாட்டில்இருந்து, அதிகளவில் தேங்காய் ஏற்றுமதியாகிறது.

இதுகுறித்து, முன்னணி ஏற்றுமதியாளர் ஒருவர் கூறியதாவது:உள்நாட்டில் தேங்காய் உற்பத்தி குறைந்து, இதன் விலை அதிகரித்து வருவதால், இதன் ஏற்றுமதி சரிவடைந்துள்ளது.நிறுவனம், முன்பு மாதத்திற்கு, 30 சரக்கு பெட்டகங்களில், தேங்காய் ஏற்றுமதியை மேற்கொண்டது. இது, தற்போது, 11 பெட்டகங்களாக சரிவடைந்துள்ளது. இவ்வாறு, அவர் தெரிவித்தார்.நடப்பாண்டின், ஜனவரி வரையிலான, 10 மாத காலத்தில், நாட்டின் தேங்காய் ஏற்றுமதி, 53,070 டன்னாக இருந்தது. இதன் மதிப்பு, 2,224 கோடி ரூபாயாகும்.

வளர்ச்சி:கணக்கீட்டு காலத்தில், அளவின் அடிப்படையில் ஏற்றுமதி, 3 சதவீதம் குறைந்துள்ளது. அதேசமயம், மதிப்பின் அடிப்படையில் இதன் ஏற்றுமதி, 28 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.கடந்த 2012–13ம் நிதியாண்டில், நாட்டின் தேங்காய் ஏற்றுமதி, 2,058 கோடி ரூபாயாக இருந்தது என, தேங்காய் மேம்பாட்டு வாரியத்தின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கொப்பரை தேங்காய் உற்பத்தி குறை வால் ஏற்றுமதி பாதிக்கப்பட்டு உள்ளதுடன், உள்நாட்டிலும், கொப்பரை மற்றும் தேங்காய் எண்ணெயின் விலை மிகவும் அதிக-ரித்துள்ளது.தற்போதைய நிலவரப்படி, ஒரு கிலோ தேங்காய் எண்ணெயின் விலை, 155 ரூபாயாகவும், ஒரு கிலோ கொப்பரையின் விலை, 110 ரூபாயாகவும் மிகவும் அதிகரித்து காணப்படுகின்றன.

## சேலத்துக்கு மாம்பழம் வரத்து அதிகரிப்பால் விற்பனை ஜோர்

**சேலம்**: சேலத்துக்கு மாம்பழம் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. விற்பனையும் ஜோராக நடந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும், மார்ச், ஏப்ரல், மே மாதங்களில், மாம்பழம் சீஸன் துவங்கிவிடும்.

அதன்படி, தற்போது, சேலத்துக்கு, நங்கவள்ளி, மேட்டூர், வாழப்பாடி போன்ற பகுதிகளில் இருந்து, விற்பனைக்காக, மாம்பழம் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது.

ஒட்டு மொத்த விற்பனையாளர்கள், மாம்பழங்களை கொள்முதல் செய்து வருகின்றனர்.

விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்வதால், உரிய லாபம் கிடைப்பதாக மொத்த விற்பனையாளர்கள் கூறுகின்றனர். அதேபோல், விவசாயிகளிடம் இருந்து வாங்கப்படும் மாங்காய்கள், குடோன்களில், இயற்கையான முறைகளில் பழுக்க வைப்பதால், அவற்றின் சுவை மாறாமல் கிடைப்பதாக, வாடிக்கையாளர்கள் கூறுகின்றனர்.

மாங்காய்களின் வரத்து அதிகரித்துள்ளதால், கோல்கத்தா, கர்நாடகா, பெங்களூரு, டில்லி, மும்பை, அஹமதாபாத் போன்ற இடங்களுக்கு, விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. சேலம் பெங்களூரா மாம்பழம் முதல் தரம், பெரியது ஒரு கிலோ, 70 முதல், 100 ரூபாய் வரை விற்பனையாகிறது. சேலம் பெங்களூரா சிறிய வகை, கிலோ, 60 முதல், 70 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

நடுசாலை மாம்பழம் ஒரு கிலோ, 50 முதல், 60 ரூபாய் வரையும், மல்கோவா முதல்தரம், 80 முதல், 120 ரூபாய் வரையும், இம்மாம் பசந்த் கிலோ, 70 முதல், 120 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

## தோப்புகளில் மாம்பழ விற்பனை ஜோர்

**செஞ்சி**: செஞ்சி பகுதி தேசிய நெடுஞ்சாலை ஓரம் உள்ள மாந்தோப்புகளில் மாம்பழ விற்பனை சூடு பிடித்துள்ளது. மாம்பழங்கள் ஆண்டு முழுவதும் கிடைப்பதில்லை. ஏப்ரல் மாதம் துவங்கி அடுத்த மூன்று மாதங்கள் வரை கிடைக்கும். விழுப்புரம் மாவட்டத்தில் இந்த ஆண்டு மழை இல்லாமல் போனாலும் மாமரங்கள் வழக்கத்தை விட அதிகளவில் காய்த்துள்ளன. நகரப்பகுதியில் கிடைக்கும் மாம்பழங்கள் அதிகளவில் செயற்கை முறையில் பழுக்க வைத்தவை. மாந்தோப்புகளில் விற்கும் பழங்கள் இயற்கையான முறையில் பழுத்தவை என்ற நம்பிக்கையில், தோப்புகளில் வாங்கும் பழக்கம் பொதுமக்களிடம் உள்ளது. மாந்தோப்புகளில் நல்ல விற்பனை நடந்ததால், மாந்தோப்புகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடைகளை மாந்தோப்புகளுக்கு வெளியிலேயே துவக்கினர். துவக்கத்தில் ஒன்றிரண்டு இடங்களில் இருந்த மாந்தோப்பு, மாம்பழ கடைகள் சில ஆண்டுகளாக ஏராளமாக பெருகி விட்டன. செஞ்சியில் இருந்து திண்டிவனம் செல்லும் சாலையில் துவக்கத்தில் ஒன்றிரண்டு மாம்பழக்கடைகள் இருந்தன. இந்த ஆண்டு 50க்கும் மேற்பட்ட கடைகளை துவங்கினர். சீசன் துவக்கத்தில் இமாம்பசன், பங்கனபள்ளி, செந்துரா, காதர் உள்ளிட்ட மாம்பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. தமிழகத்தை சேர்ந்தவர்கள் மட்டுமின்றி பெங்களூருவில் இருந்து புதுச்சேரி, மேல்மருவத்தூர் செல்லும் கர்நாடகத்தை சேர்ந்தவர்களும் வாங்கிச் செல்கின்றனர். சீசன் துவக்கத்திலேயே விற்பனை சூடு பிடித்திருப்பது குத்தகை தாரர்களை உற்சாகமடைய செய்துள்ளது.

## முந்திரி விளைச்சல் பாதிப்பு

**மரக்காணம்**: மரக்காணம் பகுதியில் பருவ மழை பொய்த்ததால் முந்திரி விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. மரக்காணம் பகுதியில் ஆலப்பாக்கம், மண்டவாய், பனிச்சமேடு, கீழ்பேட்டை, காளியாங்குப்பம், அனுமந்தை, செய்யாங்குப்பம் உள்பட 24 கிராமங்களில் மா, பலா, தென்னை, முந்திரி போன்றவை அதிகளவில் பயிரிடப்படுகின்றன. இப்பகுதியில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வரை 35 அடி ஆழம் தோண்டினாலே தண்ணீர் கிடைக்கும். கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளது. இதனால் 100 முதல் 300 அடி ஆழம் தோண்டினால் மட்டுமே தண்ணீர் கிடைக்கிறது. இதனால் மா,

பலா, தென்னை, முந்திரி போன்ற மரங்களை பராமரிப்பதில் சிரமமாக உள்ளது. விளைச்சலும் வெகுவாக குறைந்துள்ளது.

### மரக்காணம் பகுதியில் கல்யாண பூசணி சாகுபடி

**மரக்காணம்**: மரக்காணம் திண்டிவனம் சாலையில் நடுக்குப்பம் கிராமத்தில் கல்யாண பூசணி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மரக்காணம் ஒன்றியம் நடுக்குப்பம், ஆலத்துார், அசப்பூர், வடகோட்டிப்பாக்கம், கொள்ளமேடு, திருக்கனுார், வண்டிப்பாளையம், கோட்டிக்குப்பம் உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் கல்யாண பூசணி சாகுபடி செய்துள்ளனர். தற்போது சென்னை, பெங்களூரு உட்பட பல நகரங் களுக்கு விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர்.

### ஏரி பாசனமின்றி விவசாயிகள் தவிப்பு

**மரக்காணம்**: மரக்காணம் ஒன்றியத்தில் பருவமழை பொய்த்து போனதால் 25 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் குறுவை சாகுபடி செய்ய முடியாமல் போனது.

மரக்காணம் ஒன்றியத்தில் 56 ஊராட்சிகள் உள்ளன. 50க்கும் மேற்பட்ட சிறு, குறு ஏரிகள் உள்ளன. ஏரி பாசனத்தால் 40 ஆயிரம் ஏக்கரில் சம்பா போகத்தில் நெல், மணிலா, கரும்பு போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. ஏரிகளில் மீதம் உள்ள தண்ணீரை கொண்டு குறுவை சாகுபடி செய்வதுண்டு. இந்த ஆண்டு வழக்கத்திற்கும் மாறாக வடகிழக்கு பருவமழை பொய்த்து போனதால் ஏரிகளின் நீர் மட்டம் டிசம்பர் மாதத்திலே குறைந்து விட்டது. பிரதான ஏரிகள் ஆரம்பத்திலே நீர் இல்லாமல் போனதால் கால்நடைகள் பெரும் தவிப்புக்கு ஆளாகின. இதனால் குறுவை சாகுபடி செய்யாததால் 25 ஆயிரம் ஏக்கர் ஏரி பாசன நிலங்களில் விவசாயம் செய்ய முடியாமல் போய்விட்டது.

### கி.கிரியில் நெல் அறுவடை துவக்கம்: குவிந்த வெளி மாவட்ட கூலி ஆட்கள்

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இரண்டாம் போக நெல் சாகுபடி அறுவடை துவங்கிய நிலையில், கூலி ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால்,

கடலூர், திருவண்ணாமலை மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் இருந்து, ஆயிரக்கணக்கான கூலி ஆட்கள் மாவட்டத்தில் முகாமிட்டுள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரியமுத்தூர் அருகே தென்பெண்ணை ஆற்றின், குறுக்கே கட்டப்பட்டுள்ள கே.ஆர்.பி., அணை மற்றும் ஒசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணை பாசனம் மூலம், 13 ஆயிரம் ஹெக்டேரில், இரண்டாம் போக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மாவட்டத்தில் பெய்த மழை மற்றும் தென்பெண்ணை ஆற்று படுகை பகுதியான கர்நாடகா மாநிலத்தில், பெய்த மழையால் இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு உரிய நேரத்தில் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதனை கொண்டு, விவசாயிகள் நெல் சாகுபடி செய்து, தற்போது அறுவடை பணிகள் துவங்கி உள்ளது. இந்நிலையில், மாவட்டத்தில் அனைத்து பஞ்சாயத்துகளிலும், தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணிகள் நடந்து வருவதால், கொளுத்தும் வெயிலில் நெல் அறுவடைக்கு கூலி ஆட்கள் வருவதில்லை.

இதனை அறிந்த, திருவண்ணாமலை, கடலூர் மற்றும் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கான கூலி தொழிலாளிகள், தற்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முகாமிட்டு, நெல் அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பொதுவாக, திருவண்ணாமலை, கடலூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் நெல் சாகுபடி குறைவு என்பதால், அங்கிருக்கும் கூலி தொழிலாளிகள் நெல் அறுவடை துவக்கம் முதல் முடியும் வரை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தங்கி நெல் அறுவடை செய்து வருகின்றனர். இவ்வாறு தங்கி உள்ளவர்களுக்கு, நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இரண்டு வேளை உணவிட்டு, கூலியாக நெல்லை வழங்குகின்றனர். தற்போது, கே.ஆர்.பி., அணை பாசன பகுதியான சவுட்டஅள்ளி, தளி அள்ளி, ஜெகதாப், பையூர், போத்தாபுரம், கால்வேஅள்ளி ஆகிய பகுதிகளில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்துள்ள நெல் அறுவடை பணிகள் முடிவடைந்து உள்ளது. இந்த பகுதியில் தான் மூன்று மாவட்டங்களை சேர்ந்த கூலி தொழிலாளிகள் தங்கி உள்ளனர்.

இனி வரும் நாட்களில், பொன்னியம்மன் கோவிலூர், மணிநகர், பெரியமுத்தூர், சின்னமுத்தூர், நாட்டான்கொட்டாய், மலையாண்டஅள்ளி, சுண்டேகுப்பம் சுற்றுவட்டார கிராமங்களில் சாகுபடி செய்துள்ள நெல் அறுவடை பணிகள் துவங்கும். எனவே, ஜெகதாப் சுற்றுவட்டாரத்தில், தங்கியிருந்த கூலி

தொழிலாளிகள், இனி வரும் நாட்களில் பெரியமுத்தூர் பகுதியில் முகாமிட உள்ளனர். சொந்த மாவட்டத்தை சேர்ந்தவர்கள் நெல் அறுவடைக்கு வராத நிலையில், வெளி மாவட்டங்களை சேர்ந்தவர்கள், நெல் அறுவடைக்கு வந்துள்ளதால், நெல் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மலையாண்டஅள்ளியை சேர்ந்த விவசாயி மாதன் கூறியதாவது: இந்த ஆண்டு, எனக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தில், திருந்திய நெல் சாகுபடி செய்து, வெளி மாவட்டத்தை சேர்ந்த கூலி ஆட்கள் மூலம் அறுவடை செய்தேன். பச்சை நெல், ஒரு மூட்டை ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்தேன். ஏக்கருக்கு, 40 மூட்டை நெல் சாகுபடி கிடைத்தது. ஒரு ஏக்கரில் விளைந்த வைக்கோல், 15 ஆயிரத்துக்கு விற்பனை செய்தேன்.

மேலும், இந்த ஆண்டு நிலவிய சீதோஷ்ண நிலை நெல் சாகுபடிக்கு உகந்ததாக இருந்தது. பூச்சி தாக்குதல் மற்றும் நோய் தாக்குதல் இல்லாததால், எவ்வித செலவும் இல்லாமல் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது, என்றார்.

## வாழைக்கான 6 சதவீத சேவை வரி விதிப்பு ரத்து செய்ய வேண்டுமென எதிர்பார்ப்பு

**கோபிசெட்டிபாளையம்**: ""பருவமழை ஏமாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளிடம், பிடித்தம் செய்யப்படும், ஆறு சதவீத சேவை வரியை, ரத்து செய்ய வேண்டும்," என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோபி, சுற்று வட்டாரத்தில் டி.என்.பாளையம், நாகதேவன்பாளையம், வெள்ளாங்கோவில், கூகலூர், வெள்ளாளபாளையம், நல்லகவுண்டன்பாளையம், கோபிபாளையம், வாணிப்புத்தூர், போடிசின்னாம்பாளையம், பங்களாபுதூர், கொங்கர்பாளையம், வேட்டைக்காரன்கோவில், காசிபாளையம் உள்ளிட்ட இடங்களில், ரொபஸ்ட்ரா, கதளி, தேன் வாழை, பச்சை நாடன், மொந்தன் ஆகிய வகை வாழை சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த, இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், பெரும்பாலான கிணற்று பாசனம், போர்வெல் பாசனம், சொட்டு நீர் மூலம், வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அறுவடை செய்யப்படும் வாழை, கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தில், விற்பனை செய்யப்படுகிறது.

வாழைக்கன்றுகள், 12 முதல், 15 ரூபாய்க்கு விவசாயிகள் வாங்குகின்றனர். குழி வெட்டு கூலி, நடவு கூலி என ஏக்கருக்கு, 50,000 முதல், 70,000 ரூபாய் வரை செலவாகிறது. பராமரிப்பு செலவு தனியாக உள்ளது. வாழையை பொருத்தவரை, ஓராண்டு பயிரிட்டால், இரண்டு ஆண்டு அல்லது, மூன்று ஆண்டுகள் வரை, வாழை குலை அறுவடை செய்யலாம்.

முதலில் வரும் குலை நன்றாக இருக்கும். அடுத்த ஆண்டு பக்கவாட்டு கன்றுகள் மூலம், குலை வரும் என்பதால், தார் பிடிப்பு குறைவாக காணப்படும். தண்ணீர் பற்றாக்குறை காரணமாக, இரண்டாம் ஆண்டு வாழை குலை பிடிக்கவில்லை. பல்வேறு சிரமங்களுக்கு இடையில் வாழை அறுவடை செய்து, கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை செய்தால், ஆறு சதவீத சேவை வரி பிடித்தம் செய்யப்படுகிறது. ஆறு சதவீத வரியை ரத்து செய்ய வேண்டும், என, விவசாயிகள் சார்பில், பலமுறை கோரிக்கை விடுத்தும், இதுவரை அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை.

வறட்சியின் பிடியில் சிக்கியிருக்கும் விவசாயிகளிடம், சேவை வரி பிடித்தம் செய்வதை, ரத்து செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையை நிர்ணயிக்க வேண்டும், என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்க தளபதி கூறியதாவது:

கோபி, வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தில், வாழைக்கு, ஆறு சதவீத சேவை வரி பிடித்தம் செய்யப்படுகிறது. சேவை வரியை ரத்து செய்ய வேண்டும், என, போராட்டம் நடத்தினோம். அப்போது, மூன்று சதவீதமாக குறைக்கப்படும், என, இணைப்பதிவாளர் உறுதியளித்தார். இதுவரை கண்டுகொள்ளவில்லை. வாழையை, கிலோ கணக்கில் எடைப்போடு, ரூபாய் வழங்க வேண்டும். அப்போது தான் விவசாயிகளுக்கு கட்டுபடியாகும். வறட்சியால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர், ஆறு சதவீத சேவை வரியையும், முழுமையாக ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## நெகமத்தில் கொப்பரை ஏலம்

**நெகமம்** : நெகமத்தில் நடந்த கொப்பறை ஏலத்தில், 162 மூட்டை கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்யப்பட்டது. நெகமம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்றுமுன் தினம் கொப்பரை ஏலம் நடந்தது. இதில், 162கொப்பரை

மூட்டைகள் ஏலம் விடப்பட்டது. முதல் தர கொப்பரை 133 மூட்டைகள் கிலோ ஒன்றுக்கு ரூ.101.55 முதல் ரூ.104.25 க்கும், இரண்டாம்தர கொப்பரை 29 மூட்டைகள் ரூ.82.70 முதல் ரூ.94.80 க்கும் ஏலம் போனது. இதில், 25 மூட்டைகளை விவசாயிகளும், ஆறு மூட்டைகளை வியாபாரிகளும் எடுத்துச்சென்றனர். கடந்த வாரத்தில், 109 கொப்பரை மூட்டைகள் ஏலம் விடப்பட்டது. இதில், முதல் தரம் கிலோ ஒன்றுக்கு ரூ.98.50 முதல் ரூ.101.75 க்கும், இரண்டாம்தரம் ரூ.76.10 முதல் ரூ.84.25 க்கும் ஏலம் போனது. இத்தகவலை விற்பனை கூட கண்காணிப்பாளர் செல்வராஜ் தெரிவித்தார்.

**அபாய நிலையில் அமராவதி அணை நீர் மட்டம்; மழையை எதிர்பார்க்கும் விவசாயிகள்**

**உடுமலை** : மேற்குத்தொடர்ச்சி மலையில், தென்மேற்கு பருவமழை குறித்த நேரத்தில் துவங்காவிட்டால், அமராவதி அணை பாசனப்பகுதிகளில், இந்தாண்டும் நெல் சாகுபடி கைவிடப்படும் அபாயம் உள்ளது.

உடுமலை அமராவதி அணை மூலம், திருப்பூர், கரூர் மாவட்டத்திற்குட்பட்ட 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையால், அணைக்கு கிடைக்கும் நீர் வரத்து மூலம், பழைய ஆயக்கட்டு பாசனத்தில், இரண்டு போக நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தென்மேற்கு பருவமழையை ஆதாரமாக கொண்டு, அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்படும்.ஆனால், பருவமழைப்பொழிவு குறைவு காரணமாக கடந்த மூன்று ஆண்டுகளாக பழைய ஆயக்கட்டு பாசனப்பகுதிகளில், நெல் சாகுபடி முறையாக மேற்கொள்ளப்படவில்லை.வடகிழக்கு மற்றும் கோடை மழையும், அணையின் நீர் பிடிப்பு பகுதியான கேரள மாநில மேற்குத்தொடர்ச்சி மலையில், பெய்யவில்லை. இதனால், அணையின் நீர் மட்டம் சரிந்து வந்தது. இந்நிலையில், கடந்த வாரம், அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக மூன்று நாட்கள் ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது. 21 ம் தேதி வினாடிக்கு 700 கன அடியும், 22, 23 ல் வினாடிக்கு 500 கன அடியும், தண்ணீர் ஆற்றில் திறந்து விடப்பட்டது. வெளியேற்றம் காரணமாக அணையின் நீர் மட்டம் வேகமாக சரிந்து, நேற்றைய காலைநிலவரப்படி, அணையின் நீர் மட்டம் 17.09 அடியாக இருந்தது. நீர்த்தேக்க

பகுதியில், தேங்கியுள்ள 15 அடி சகதி காரணமாக அணையில் 2 அடி நீர் மட்டுமே உள்ளது. அணை நீர் மட்டம் வறளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதால், கூட்டுக்குடிநீர் திட்டங்களின் நிலை கேள்விக்குறியாக உள்ளது. அணை நீர் மட்டம் பரிதாப நிலையில் உள்ளதால், பாசனப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். விவசாயிகள் கூறுகையில், 'கடந்த மூன்று ஆண்டுகளாக அமராவதி அணை நீர் பிடிப்பு பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதனால், நெல் பயிரிட்ட விளைநிலங்களில் மானாவாரி பயிரான எள் பயிரிட வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.தென்மேற்கு பருவமழை குறித்த நேரத்தில் துவங்கினால், மட்டுமே ஒரு போக நெல் சாகுபடியாவது மேற்கொள்ள முடியும். இல்லாவிட்டால், ஆண்டு முழுவதும் விளைநிலங்களை தரிசாக விட வேண்டிய நிலை உருவாகும்' என்றனர்.

## ஒட்டன்சத்திரம் பகுதியில் கோடை மழை

**ஒட்டன்சத்திரம்** : ஒட்டன்சத்திரம், அத்திக்கோம்பை, காளாஞ்சிபட்டி, வெரியப்பூர் கிராமங்களில் நேற்று முன்தினம் இரவு அரை மணி நேரத்திற்கும் மேலாக பலத்த மழை பெய்தது. ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகளில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. காற்றில் உள்ள ஈரப்பதம் குறைந்ததால், அனல் காற்று வீசியது. பல இடங்களில் மழை மேகங்கள் காணப்பட்ட போதிலும், இப்பகுதியில் மழை பெய்யாமல் இருந்ததால் மக்கள் ஏமாற்றம் அடைந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு மேல் திடீரென்று இடி மின்னலுடன் அரைமணி நேரத்திற்கும் மே லாக பலத்த மழை பெய்தது. மறுநாள் பார்த்தபோது மழை பெய்ததற்கான சுவடே தெரியாத அளவிற்கு காய்ந்து கிடந்த நிலப்பரப்பு மழைநீரை உள்ளிழுத்துக் கொண்டது. இம்மழையானது சுட்டெரிக்கும் வெயிலில் வாடிய மக்களுக்கு தற்காலிக நிவாரணமாக இருந்தது.

## பயறுவகை உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

**தேனி** : தேனி மாவட்டத்தில் பயறுவகை உற்பத்தியை அதிகரிக்க, விவசாயத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. மாவட்டத்தில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில்

மானாவாரியிலும், மார்ச், ஏப்ரல் மாதங்களில் நெல் தரிசிலும், ஜனவரி, பிப்ரவரி, மே, ஜூன் மாதங்களில் இறவையில் ஊடுபயிராகவும், பயறுவகை சாகுபடி நடக்கிறது. தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் உயர் விளைச்சல் தரக்கூடிய பயறு வகை விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி, நெல் தரிசில் பயறு வகைகளை விதைக்க ஊக்கப்படுத்ததுகின்றனர். வாழை, கரும்பு, பருத்தி பயிர்களில் ஊடுபயிராக பயறு வகைகளை விதைக்க விவசாயிகளை ஊக்கப்படுத்தவும், விவசாயத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. தொடக்க கூட்டுறவு வங்கி மூலம், பயிர்க்கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது எக்டேருக்கு 540 கிலோ பயறு வகை விளைவிக்கப்படுகிறது. இதனை 750 டன்னாக அதிகரித்து, மாவட்டத்தில் மொத்த பயறு வகை விளைச்சலை அதிகரிக்க விவசாயத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக ஒருங்கிணைந்த உரநிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு குறித்து விளக்க செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

## சூறாவளி காற்றுடன் பலத்த மழை; 200 தென்னை மரங்கள் சாய்ந்தன

**தேவதானப்பட்டி** : தேவதானப்பட்டி பகுதியில், நேற்று முன்தினம் இரவில் சூறாவளிக் காற்றுடன் பெய்த கன மழையில், பல மின் கம்பங்கள் முறிந்து விழுந்தன. 200க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் மின்தடை ஏற்பட்டது. தேவதானப்பட்டி, மஞ்சளார், மூங்கிலணை காமாட்சி அம்மன் கோயில், மலை அடிவாரம் ஆகிய பகுதியில் பல நூறு ஏக்கரில் தென்னை மரங்கள் சாகுபடி நடக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், வறட்சியால் தென்னை மரங்கள் காய்ந்து வருகின்றன. இந்நிலையில், குறைந்த அளவில் விவசாயக் கிணறுகளில் கிடைத்து வரும் நீரை பயன்படுத்தி விவசாயிகள் தென்னை மரங்களை பாதுகாத்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவில், தேவதானப்பட்டி, மஞ்சளார் பகுதிகளில் பலத்த சூறாவளிக் காற்றுடன் மழை பெய்தது. அப்போது, பல இடங்களில், மரங்கள் முறிந்து விழுந்தன. 20 ஆண்டுகளுக்கும் மேலாக பலன் கொடுத்துக் கொண்டிருந்த 200க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் முறிந்தன. 10க்கும் மேற்பட்ட மின் கம்பங்களும் சாய்ந்தன. மூங்கிலணை காமாட்சி அம்மன் கோயில் உள்பகுதியில், 30 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த வேப்ப மரம் வேரோடு

சாய்ந்தது. இவ்வாறு சாய்ந்த மரம் அருகில் இருந்த டிரான்ஸ்பார்மர் மீது விழுந்தது. இதனால் இப்பகுதியில் மின்தடை ஏற்பட்டது.

தேவதானப்பட்டி பி.எஸ்.என்.எல்., டெலிபோன் எக்சேஞ்ச் செயல் இழந்தது. சில இடங்களில் வாழை மரங்கள் சேதமடைந்தன.

## தேனி மாவட்டத்தில் மாம்பழக்கூழ் தொழிற்சாலை அமைக்க பரிந்துரை

**தேனி** : தேனி மாவட்டத்தில், மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டும், என தோட்டக்கலைத்துறை அரசுக்கு பரிந்துரை அனுப்பி உள்ளது.

மாவட்டத்தில் 9,123 ஹெக்டேரில் அல்போன்சா, ஹூமாயுதீன், பெங்களூரா, நீலம் போன்ற மா ரகங்கள் சாகுபடி நடக்கிறது. போடி, பெரியகுளம் பகுதியில் மா விளைச்சல் அதிகம் உள்ளது. ஆண்டுக்கு 61 ஆயிரத்து 663 டன் மாம்பழங்கள் விளைவிக்கப்பட்டு கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மாவட்டத்தில் மாம்பழத்தை பதப்படுத்துவதற்கோ, கூழ் தயாரிப்பதற்கோ தனியாக தொழிற்சாலைகள் இல்லை. எனவே வியாபாரிகள் கேட்கும் விலைக்கு விற்க வேண்டிய நிலை, விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. எனவே மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கலாம். இந்த தொழிற்சாலையில் இருந்து, ஒரு லட்சம் கிலோ மாம்பழக்கூழ் தயாரிக்க முடியும். தற்போது விளையும் மாம்பழத்தில் இருந்து, 37 ஆயிரம் டன் மாம்பழக்கூழ் தயாரிக்க முடியும். எனவே, தொழிற்சாலைக்கு தேவையான மாம்பழத்தை பக்கத்து மாவட்டங்களிலும் பெறலாம். எனவே, மாம்பழக்கூழ் தயாரிப்பு தொழிற்சாலை அமைப்பதால், தேனி மாவட்டம் மட்டுமின்றி, பக்கத்து மாவட்ட விவசாயிகளுக்கும் பலன் கிடைக்கும், என தோட்டக்கலைத்துறை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

## தேக்கடியில் மழை

**கூடலூர்** : பெரியாறு அணை நீர்மட்டம், நேற்று காலை நிலவரப்படி 109.70 அடியாக இருந்தது. நீர்வரத்து மற்றும் நீர்திறப்பு 100 கன அடியாக இருந்தது. நீர் இருப்பு 864 மில்லியன் கன அடியாகும். தேக்கடியில் 5.6 மி.மீ., மழை பதிவானது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.50 உயர்த்த மத்திய அரசு முடிவு



**புதுடெல்லி**: நெல் கொள்முதல் செய்வதற்கான குறைந்த பட்ச ஆதார விலையை (எம்எஸ்பி) குவிண்டாலுக்கு (நூறு கிலோ) ரூ.50 உயர்த்தி வழங்கிட மத்திய வேளாண்மை அமைச்சகம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதுகுறித்து மத்திய வேளாண்மை அமைச்சக அதிகாரிகள் கூறியதாவது: நடப்பு 2014-15ம் ஆண்டு பயிர் பருவத்தில் (ஜூலை-ஜூன்) விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் மற்றும் பருத்தி ஆகியவற்றிற்கு குறைந்த பட்ச ஆதார விலையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50 உயர்த்தி வழங்கிட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பரிந்துரை குறிப்பை அமைச்சகங்களுக்கு இடையிலான குழுவிற்கு அனுப்பி கருத்து பெறப்படும். பின்னர் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். புதிதாக அமைய உள்ள அரசு இறுதி முடிவு எடுத்து அறிவிக்கும். பொதுவான நெல் ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50ம், 'ஏ' கிரேட் ரகத்திற்கு ரூ.55ம் வழங்கப்படும். மக்காசோளத்திற்கு ரூ.30ம், கேழ்வரகுக்கு ரூ.50ம் வழங்கப்படும். அதே நேரத்தில் நிலக்கடலை மற்றும் சோயாபீன் ஆகியவற்றின் கொள்முதல் விலையில் எந்த மாற்றமும் இல்லை. சூரியகாந்தி விதைக்கு குவிண் டால் ஒன்றுக்கு ரூ.50 கூடுதலாக அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நெல் கொள்முதலுக்கான குறைந்த பட்ச ஆதார விலையை உயர்த்துவதன் மூலம், விவசாயிகள் அரசு கொள்முதல் மையங்களுக்கு விற்பனைக்கு அதிக அளவில் கொண்டுவருவார்கள். இப்படி வரும் நெல்லை கொள்முதல் செய்வதன் மூலம் மத்திய அரசின் கிடங்குகளில் போதுமான இருப்பும் வைக்கமுடியும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## மீண்டும் தலைதூக்குகிறது தாய்லாந்து

### அரிசி ஏற்றுமதியில் முதலிடத்தை இந்தியா பறிகொடுக்கிறது



**மும்பை:** அரிசி ஏற்றுமதியில் முதலிடத்தை தொடர்ந்து இந்தியா தக்க வைத்துக்கொள்ள முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. விட்ட இடத்தை மீண்டும் தாய்லாந்து பிடிக்கும் என்று தெரிகிறது. அரிசி ஏற்றுமதியில் இந்தியா தான் கடந்த இரண்டாண்டாக முதலிடத்தில் இருந்து வருகிறது. ஆனால், இப்போது திடீரென சரிவை கண்டு வருகிறது. இதற்கு காரணம், தாய்லாந்து, வியட்நாம் நாடுகளில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் அரிசி விலை, இந்தியாவின் அரிசி விலையை விட குறைவானது. இதனால் இந்தியாவில் ஏற்றுமதி அளவு சடாரென குறைந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலை நீடித்தால் விரைவில் இந்தியாவை தாய்லாந்து பின்னுக்கு தள்ளி விடும் என்று தெரிகிறது. கடந்த 2012 ம் ஆண்டு தாய்லாந்தை இந்தியா இந்த விஷயத்தில் முறியடித்து , அரிசி ஏற்றுமதியில் முதலிடத்தை பிடித்தது. ஏற்றுமதியை அதிகரிக்க மத்திய அரசின் கொள்கை முடிவு தான் காரணம். கடந்த

2011 ல் அரசு ஒரு அதிரடி முடிவை எடுத்தது. 4 ஆண்டாக இருந்த அரிசி ஏற்றுமதி தடையை தளர்த்தியது. பாசுமதி அல்லாத ரகங்களுக்கு அதுவரை தடை இருந்தது. இந்த தடை விலக்கிய பின், பாசுமதி அல்லாத அரிசி ரகங்கள் அதிக அளவில் ஏற்றுமதி ஆக துவங்கின. இந்திய அரிசிக்கு வரவேற்பும் அதிகரித்தது. கடந்த மார்ச் மாதத்துடன் முடிந்த 2013-14 ல் இந்தியா 40 லட்சம் டன் பாசுமதி அரிசி, 65 லட்சம் டன் பாசுமதி அல்லாத அரிசி ரகங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. வரும் நிதி ஆண்டில் பாசுமதி அரிசி ரகங்கள் ஏற்றுமதி பாதிக்காது என்றாலும், மற்ற ரகங்கள் ஏற்றுமதியில் போட்டி காரணமாக பாதிக்கலாம். மொத்தத்தில் 80 லட்சம் டன்னாக குறையலாம் என்று அரிசி ஏற்றுமதியாளர்கள் கருதுகின்றனர். தாய்லாந்து அரிசி ரகங்கள் மிகவும் விலை குறைவு என்பதால் அதிக அளவில் இந்தாண்டு ஏற்றுமதி ஆகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**சென்னையில் குவியும் ஆந்திரா மாம்பழம்**



**சென்னை:** ஆந்திராவில் இருந்து சென்னைக்கு அதிகளவில் மாம்பழம் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. இதுகுறித்து கோயம்பேடு மார்க்கெட் மொத்த வியாபாரிகள் கூறுகையில், 'ஆந்திரா, கேரள, சேலத்திலிருந்தும் மாம்பழம் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது.

தற்போது, தினமும் 200 டன் வருகிறது. சீசன் உச்சத்தில் மாம்பழம் அதிகளவில் விற்பனைக்கு வரும் அப்போது விலையும் சற்று குறைய வாய்ப்பு உண்டு. மாம்பழம் ரகம்-தரத்திற்கு ஏற்ப ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.60 வரை விலை வைத்து விற்கிறோம்' என்றனர்.

**ஐஓபி வங்கி சார்பில் இலவச ஆடு வளர்ப்பு பயிற்சிவிண்ணப்பிக்க அழைப்பு**

**புதுக்கோட்டை**, : புதுக் கோட்டையில் இந்தியன் ஓவர்சீஸ் கிராமிய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம் சார்பில் ஆடுகள் வளர்ப்பு இலவச பயிற்சி 6 நாட்கள் நடைபெற உள்ளது.

புதுக்கோட்டை இந்தி யன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம் சார்பில் புதுக் கோட்டை மாவட்ட கிராமப்புறத்தைச் சேர்ந்த படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்கு ஆடுகள் வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி 6 நாட்கள் நடத்த உள்ளது. இந்த பயிற்சியில் கலந்துகொள்ளும் அனை வருக்கும் தினசரி இலவச மதிய உணவு மற்றும் படிப்பதற் கான குறிப்பு புத்தகங்களுடன் தரமான பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படும். இந்த பயிற்சியின் முடிவில் பயிற்சி நிறைவுச் சான்றிதழ் வழங்கப்படும். இதில் 18 வயது முதல் 35 வயதிற்குள் உள்ள கிராமப்புற ஆண்கள் மற்றும் பெண்கள் 3 பாஸ்போர்ட் சைஸ் புகைப்பட நகல்க ளோடு மாற்றுச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை நகல்களையும் இணைத்து அவரவர் தம்முடைய கைப்பேசி எண்ணையும், குறிப்பிட்டு வரும் மே 2ம் தேதிக்கு முன்பாக நேரில் வந்து விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு நிலைய இயக்குநர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம், 15062 மேல நான்காம் வீதி (திலகர் திடல் ஆட்டோ ஸ்டாண்ட் எதிரில்) புதுக் கோட்டை. தொலைபேசி எண் 04322225339, கைப் பேசி எண் 9994737185 என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

**தேனி மாவட்டத்தில் பரவலாக மழை**

**தேனி,** : தேனி மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்ததால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கோடை வெயில் கொளுத்திவரும் சூழலில் மழை இல்லாமல் பொதுமக்கள் பரிதவித்து வருகின்றனர். நீர்நிலைகள் வறண்டு கிடப்பதால் கால்நடைகள் குடிக்க நீரின்றி அவதிப்படுகின்றன. மழையை எதிர்பார்த்து மக்கள் காத்திருந்த நிலையில் தேனி மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. நேற்று மாலை 7 மணியளவில் பலத்த காற்று, இடி, மின்னலுடன்

மழை பெய்தது. இதில் சில இடங்களில் கூரை வீடுகள், சிறிய மரங் கள் சாய்ந்தன. மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. தொடர்ந்து இடி, மின்னல் தாக்கியது. இதனால் மக்கள் அச்சமடைந்தனர். சுமார் ஒருமணி நேரம் மழை நீடித்தது.

இதனால் தேனி நகர சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. வாகனங்கள் ஊர்ந்து சென்றன. மழை காரணமாக இரவில் குளிர்ச்சியான சூழ்நிலை உருவானது. நீண்ட நாளுக்கு பின் மழை பெய்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**106 டிகிரி வெயில் கொளுத்தியது**

**ஈரோடு,**

ஈரோடு மாவட்டத்தில் தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. கடந்த சில வாரங்களாக வெயில் 100 டிகிரி முதல் 104 டிகிரியாக இருந்தது. நேற்று முன்தினமும் வழக்கம் போல் வெயில் அதிகமாக இருந்தது. ஆனால் மாலையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதனால் பொதுமக்கள் மழை வரும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் பலத்த காற்றுடன் சிறிது நேரம் மட்டுமே மழை பெய்தது.

இந்த நிலையில் நேற்று ஈரோட்டில் வெப்பம் அதிகமாக இருந்தது. ரோட்டில் நடந்து செல்லமுடியாத அளவுக்கு அனல்காற்று வீசியது. நேற்று வெயில் அளவு அதிகபட்சமாக 105.8 டிகிரியாக (41 செல்சியஸ்) இருந்தது.

வெயிலின் கொடுமையால் பொதுமக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கி கிடக்க நேரிட்டது. மதியம் ரோட்டில் மக்களின் நடமாட்டம் குறைவாக இருந்தது.

**குளிர்பானங்களை நாடி...**

வெயில் வாட்டி எடுத்ததால் உடல் வெப்பத்தை தணிக்க பொதுமக்கள் குளிர்பானங்களை அதிக அளவில் வாங்கி குடித்தனர். இதனால் குளிர்பானக்கடைகளில் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக நுங்கு, இளநீர், கரும்புபால், கம்பங்கூழ் மற்றும் பழ ஜூஸ் போன்றவற்றை அதிகமாக விரும்பி குடித்தனர். அதனால் தற்போது நுங்கு, இளநீர், கம்பங்கூழ் போன்ற தற்காலிக கடைகள் ரோட்டு ஓரத்தில் அதிக அளவில் காணப்படுகின்றன. இவற்றினை தற்போது பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி பருகுவதால் அதன் விலையும் சற்று உயர்ந்துள்ளது. தற்போது நுங்கு 3 கண் 10 ரூபாய்க்கும், இளநீர் ஒன்று 15 ரூபாய் முதல் 25 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது. கரும்புபால் 7 ரூபாய்க்கும், பழ ஜூஸ் 10 ரூபாய் முதல் 30 ரூபாய் வரையும் விற்பனையாகிறது. கத்தரி வெயில் தொடங்கும் முன்னரே வெயிலின் கொடுமை அதிக அளவில் உள்ளது. இதனால் பொதுமக்கள் மழை வராதா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

**காங்கயத்தில் தேங்காய் எண்ணெய் தொழில் மீண்டும் துவங்கியது தொழிலாளர்களுக்காக காத்திருக்கும் ஆலை அதிபர்கள்**



**காங்கயம்,**

காங்கயம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் கடந்த ஒரு வருட காலமாக முடங்கி கிடந்த தேங்காய் எண்ணெய் தொழில் தற்போது மீண்டும் துவங்கியுள்ளது.

தேங்காய் எண்ணெய் ஆலை

தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு பெயர் பெற்ற காங்கயம் எண்ணெய் ஆலைகள் தற்போது புத்துணர்வு பெற்று களங்களில் இப்போது உடைப்பு பணிகள் நடந்து வருவதை பார்க்கமுடிகிறது. கடந்த ஒருவருட காலமாக தமிழகத்தில் கடுமையான வறட்சி

நிலவுவதால் தேங்காய் வரத்து நின்று போனது. இந்நிலையில் கடந்த ஒரு மாத காலமாக தேங்காய் வரத்து துவங்கியுள்ளது.

கடும் வறட்சி,விலை உயர்வு

கடுமையான வறட்சி காரணமாக தேங்காய் விலை கடுமையாக உயர்ந்தது. இதனால்தொழிலை செய்யமுடியாத நிலை ஏற்பட்டது. அதிக விலை கொடுத்து தேங்காய் வாங்கி, பருப்பு எடுத்து விற்கும்போது விலை கட்டுப்படியாகாததால் மேற்கொண்டு இந்த தொழிலை செய்யமுடியாமல் ஆலை முதலாளிகளும்,பருப்பு உற்பத்தியாளர்களும் பலத்த நஷ்டத்திற்கு ஆளாகினர். ஒரு சிலர் மட்டுமே தொழிலை தொடர்ந்து செய்து வந்தனர். ஆனாலும் எதிர்பார்த்த அளவுக்கு வரத்து இல்லாமல் போனது.

வெளி மாநில, நாடுகளில் இருந்து வரத்து சற்று அதிகரிப்பு

தற்போது கேரளா,அந்தமான்,மைசூர் போன்ற பகுதிகளில் இருந்து தான் ஓரளவுக்கு வரத்து உள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை கடுமையான வறட்சி காரணமாக போதிய வரத்து இல்லை தேனி,கம்பம் போன்ற பகுதிகளில் இருந்து மட்டும் குறைவாகவே வரத்து உள்ளது. ஏற்கனவே இருப்பு வைத்திருந்த பருப்பு நல்ல விலை வந்ததும் விற்கப்பட்டதால் தற்போது எண்ணெய் ஆலைகளுக்கு அனுப்ப போதிய பருப்பு இல்லாமல் எண்ணெய் உற்பத்தி மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இருந்து வரும் பாமாயில்,தற்போது இந்தியாவில் நடக்கும் தேர்தல் காரணமாக வரத்து குறைந்து போனது. இதனால் தேங்காய் எண்ணெய் தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே தேங்காய் பருப்பு மற்றும் எண்ணெய் விலை உயர்ந்துள்ளதாகசொல்லப்படுகிறது.

பருப்பு விலை உயர்வு

கடந்த இரண்டு மாதகாலமாக பருப்பு விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த மாதம் ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.105 வரை உயர்ந்தது. பின்னர் அவ்வப்போது இதன் விலை சற்றே ஏறி இறங்கினாலும் தற்போது மீண்டும் உயர்ந்தது. நேற்று ஒரு கிலோ பருப்பு விலை ரூ.106 ஆக உயர்ந்தது. இதே போல தேங்காய் எண்ணெய் விலையும் தொடர்ந்து உயர்ந்து வந்துள்ளது. கடந்த மாதம் 15 கிலோ கொண்ட ஒரு டின் ரூ.2100 முதல் ரூ.2250 வரை ஏற்ற இறக்கத்துடன் இருந்தது. நேற்று இதன் விலை ரூ.2280 ஆக உயர்ந்தது. தமிழகத்தில் வறட்சி காரணமாக போதிய காய் வரத்து இல்லை என்றாலும் வெளி மாநிலங்களில் இருந்து காய்கள் வரத்துவங்கியுள்ளது.

ஆலை உரிமையாளர்கள் எதிர்பார்ப்பு

அதே சமயம் களத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கடந்த வருடம் வேலை இல்லாமல் ஊருக்கு சென்றவர்களும்,பாராளுமன்ற தேர்தலுக்கு ஓட்டு போட சென்றவர்களும் திரும்பி வந்தால் தேங்காய் களங்களில் மீண்டும் வேலைகள் நடைபெறும் என்று தொழிலாளர்களை எதிர்பார்த்து ஆலை அதிபர்களும்,பருப்பு உற்பத்தியாளர்களும் காத்திருக்கிறார்கள். தற்போது சுமார் 40 சதவீதம் அளவிற்கு தொழில் நடந்து வருகிறது. எனவே,இன்னும் ஒருசில நாட்களில் பருப்பு மற்றும் எண்ணெய் விலை குறைய வாய்ப்பு உள்ளதாக சொல்லப்படுகிறது. ஆனாலும் பழைய நிலைக்கு திரும்ப தமிழகத்தில் நல்ல மழை பெய்து காய் வரத்து இருந்தால் மட்டுமே முடியும் என்கின்றனர்.

**மீன்பிடி தடைகாலம் எதிரொலி:கோட்டைப்பட்டினம், ஜெகதாபட்டினம் கடற்கரை பகுதிகள் வெறிச்சோடின வீடுகள், கடைகள் மூடிக்கிடக்கின்றன**

**கோட்டைப்பட்டினம்,**

மீன்பிடி தடைகாலம் காரணமாக கோட்டைப் பட்டினம் மற்றும் ஜெகதா பட்டினம் கடற்கரை பகுதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. மேலும் வீடுகள், கடைகள் மூடிக்கிடக்கின்றன.

விசைப்படகு மீனவர்கள்

புதுக்கோட்டை மாவட்ட கடற்கரையோர பகுதியில் 30–க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்கள் உள்ளன. இந்த கிராம பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் விசைப்படகு, நாட்டுப்படகு, பாய்மரப்படகு போன்ற படகுகளில் கடலு க்கு சென்று மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர்.

இதில் நாட்டுப்படகு, பாய் மரப்படகு மீனவர்கள் புதுக்குடி, செல்லனேந்தல், ஆர்.புதுப்பட்டினம், முத்துக் குடா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து கடலுக்கு சென்று மீன்பிடித்து வருகின் றனர்.

விசைப்படகு மீனவர்கள் ஜெகதாபட்டினம் மற்றும் கோட்டைப் பட்டினத்தில் உள்ள விசைப்படகு மீன் பிடி தளங் களில் இருந்து கடலுக்கு சென்று மீன்பிடித்து வருகின்றனர்.

இதில் நாட்டுப் படகு மற்றும் பாய்மரப் படகுகளில் மீனவர்கள் பிடித்து வரும் மீன்கள் கட்டு மாவடியில் உள்ள பெரிய மீன் சந்தையில் விற்பனைக்கு கொண்டு செல்லப்படும்.

மீன்பிடி தடைகாலம்

விசைப்படகு மீனவர்கள் பிடித்து வரும் மீன்கள், நண்டு, இறால் போன்றவை புதுக்கோட்டை மாவட்ட பகுதிகளில் மட்டுமின்றி, தமிழகத்தின் பிற மாவட்டங்கள், வெளி மாநிலங் கள் மற்றும் வெளிநாடுகளுக்கும் விற் பனைக்காக கொண்டு செல்லப் படுகின்றன.

இந்த நிலையில் தமிழகத்தில் ஆண்டுதோறும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மீன்களின் இனப்பெருக்க காலமாக கருதி 45 நாட்களுக்கு விசைப்படகுகளில் கடலுக்கு சென்று மீன்பிடிக்க தடை விதிக்கப்படும்.

அதுபோல் இந்த ஆண்டும் கடந்த 15–ந் தேதி முதல் வருகிற மே மாதம் 30–ந் தேதி வரை 45 நாட்களுக்கு விசைப்படகுகளில் கடலுக்கு சென்று மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இத னால் புதுக்கோட்டை மாவட் டத்தை சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை.

சொந்த ஊருக்கு சென்ற மீனவர்கள்

புதுக்கோட்டை மாவட் டத்தில் உள்ள கடலோர பகுதியை சேர்ந்த மீனவர் கள் மட்டுமின்றி, வெளி மாவட் டங்களை சேர்ந்த மீனவர் களும் தங்கியிருந்து மீன்பிடி தொழி லில் ஈடுபடு வது வழக்கம். இதில் நாகப் பட்டினம், ராம நாதபுரம் மாவட்டம் ராமேஸ் வரம், காரைக்கால், கடலூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் புதுக்கோட்டை மாவட்ட கடலோர பகுதியில் தங்கியிருந்து மீன்பிடித்து வந் தனர்.

தற்போது மீன்பிடி தடைகாலம் அறிவிக்கப்பட் டதை தொடர்ந்து அவர்கள் தங்களது சொந்த ஊருக்கு சென்று விட்டனர். இதனால் கடற்கரையோ பகுதியில் உள்ள கடைகளும் பூட்டி கிடக் கின்றன.

மீன்கள் ஏலக்களம்

மேலும் தடைகாலத்திற்கு முன்பு விசைப்படகுகளில் மீன்பிடித்து வரும்போது காலை நேரங்களில் விசைப் படகுகளில் இருந்து மீன்கள் சிறிய படகுகளில் ஏற்றி, அவற்றை கரைக்கு கொண்டு வருவது வழக்கம். பின்னர் அந்த படகுகளில் இருந்து மீனவர்கள் கூடைகளில் மீன்களை சுமந்து ஏலக்களத்திற்கு கொண்டு வருவார்கள்.

அங்கு அமைக்கப்பட்டுள்ள ஓலைக்கொட்டகைகுள் அந்த மீன்களை கொட்டி வைத்து, அதனை ஏலம் விடுவார்கள். இதனால் தூத்துக்குடி உள் ளிட்ட பல்வேறு மாவட்ட பகுதிகளையும் சேர்ந்த மீனவர்கள் அங்கு வந்து, மீன்களை ஏலத்தில் எடுத்து, வாகனங்களில் ஏற்றி தங்களது ஊருக்கு கொண்டு செல்வார் கள்.

கடற்கரை பகுதி வெறிச்சோடியது

மீன்கள் ஏலம் முடிந்த பின்னர், அப்பகுதியில் மீத மிருக்கும் சங்காயம் என்று கூறப்படும் கழிக்கப்பட்ட மீன்கள், நண்டு, இறால் போன்றவற்றை உள்ளூரை சேர்ந்த வியாபாரிகள் ஏலம் எடுப்பார்கள். பின்னர் அந்த மீன் கழிவுகளை மதிய நேரத்தில் கடற்கரையோர பகுதியில் உலர வைத்து, விற்பனை செய்வார்கள். பின்னர் மாலை நேரங்களில் மறுநாள் கடலுக்கு மீன்பிடிக்க செல்வதற்காக விசைப்படகுகளுக்கு கடற் கரை பகுதியில் இருந்து மீனவர்கள் டீசல் வாங்கிச் செல்வார்கள்.

இதனால் ஜெகதாபட்டினம் மற்றும் கோட்டைப்பட்டினம் கடற்கரை பகுதி காலை முதல் மாலை வரை மீனவர்கள், வியாபாரிகள் கூட்டத்துடன் பரபரப்பாக காணப்படும். ஆனால் தற்போது மீன்பிடி தடைகாலம் என்பதால் பிற மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் தங்களது வீட்டை பூட்டிவிட்டு, ஊருக்கு சென்று விட்டதாலும், மீன்கள் ஏலம் போன்வறை நடை பெறாத தாலும், கடற்கரை பகுதி ஆளரவமின்றி வெறிச்சோடி காணப்படுகிறது.